ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 26 ] [ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 4
Total No. of Questions : 26 ] [ Total No. of Printed Pages : 4

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 118-T (NS)**

**Code No. : 118-T (NS)**

# ಕಲಿಕೆಯನು–ಅನುಕೂಲಿಸುವುದು (ಕಿ.ಪ್ರಾ.ಶಾ.) — ಪರಿಸರ ಅಧ್ಯಯನ

# FACILITATING LEARNING ( LPS ) — ENVIRONMENTAL STUDIES

(ತಮಿಳು ಭಾಷಾಂತರ)

( Tamil Version )

**(ಹೊಸ ಪಠ್ಯವಸ್ತು)**

**( New Syllabus )**

ದಿನಾಂಕ : 03. 07. 2015 ]
Date : 03. 07. 2015 ]

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 10.00 ರಿಂದ ಮಧ್ಯಾಹ–1.00 ರವರೆಗೆ ] [ ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 60
Time : 10.00 A.M. to 1.00 P.M. ] [ Max. Marks : 60

*ಅಭ್ಯರ್ಥಿಯ ನೋಂದಣಿ ಸಂಖ್ಯೆ*
*Register Number of the Candidate*

## பகுதி – I

கீழ்க்காணும் வினாக்களுக்கு நான்கு மாற்று விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைக்கான புத்தகத்தில் எழுதவும். **எல்லா** வினாக்களுக்கும் கட்டாயமாக விடையளிக்கவும் : 10 × 1 = 10

1. முன் ஆரம்பநிலைப் பள்ளியில் உள்ள இளம் மாணவர்களின் குறைவான கவனத்திற்கான காரணம்
   (A) ஒழுங்குமுறையைக் கண்டிப்பாக பராமரித்தல்
   (B) கற்பிக்கும் உத்திகளில் வேறுபாடு
   (C) மனஒருமையில் (Concentration) துரிதமான மாற்றம்
   (D) ஓய்வு நேரம் நீடிக்கப்படுதல்.

2. குழந்தையின் முன்னேற்றத்தின் பார்வையில் முழுமைநிலைக் கல்வியின் (Holistic Education) குறிக்கோள்
   (A) கல்விக்குரிய சாதனை (B) உணர்ச்சிபூர்வமான முன்னேற்றம்
   (C) திறன் வளர்ச்சி (D) முழுமையான வளர்ச்சி.

3. N.C.F., 2005 க்கு உள்ளான வழிகாட்டு நெறிகளில் முக்கியமானது
   (A) பள்ளிக்கு வெளியேயுள்ள வாழ்க்கையுடன் அறிவை இணைத்தல்
   (B) கற்ற ன் பழைய முறைகளைக் கடைப்பிடித்தல்
   (C) பாடப்புத்தகத்தை மையப்படுத்துதல்
   (D) தேர்வினைக் கடினமாக்குதல்.

4. சுற்றுச்சூழல் பிரச்சனைகளை நிர்வகிப்பதில் முக்கியமான அம்சம்

(A) உற்றுநோக்கல் (B) பயம்

(C) விழிப்புணர்வு (D) பயிற்சி (Practice).

5. ‘வாசுதேவ குடும்பகம்’ (Vasudhaiva kutumbakam) என்னும் முழக்கத்தின் பொருள்

(A) நாமெல்லோரும் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள்

(B) நாமெல்லோரும் ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள்

(C) நாமெல்லோரும் ஒரு மொழியைச் சேர்ந்தவர்கள்

(D) நாமெல்லோரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

6. கீழ்க்காணும் எக்காரணிகள் இயற்கை அழகுணர்ச்சி மதிப்பைப் (Aesthetic value) பெற்றுள்ளது ?

(A) சுற்றுச்சூழ ல் உள்ள பொருட்களைப் பயன்படுத்துதல்

(B) சுற்றுச்சூழ ல் உள்ள பொருட்களைப் பாராட்டுதல்

(C) சுற்றுச்சூழ ல் உள்ள பொருட்களின் வகைப்பாடு

(D) சுற்றுச்சூழ ல் உள்ள பொருட்களைப் பற்றி அறிதல்.

7. செய்தித்தாளில் வெளியான ஒரு கட்டுரையி ருந்து பெற்ற செய்தியைப் பயன்படுத்தி EVS ஐ நிர்வகிக்கும் முறை

(A) கலந்துரையாடல் முறை (B) விளையாட்டு (Play-way) வழிமுறை

(C) கதை முறை (D) வழிகாட்டுதல் (Insruction) முறை.

8. EVS இன் அறிவாற்றல் சார்ந்த (Cognitive) மற்றும் அறிவாற்றல் சார்பற்ற (non-congnitive) கற்றல் விளைவுகளை அளக்கும் நுட்பம்

(A) நிகழ்வுகள் (incidents) (B) வினாத்தொடர்கள்

(C) விளக்கப்படங்கள் (D) சூழ்நிலைகள்.

9. உயிரற்ற மூலத்தி ருந்து (Abiotic resources) பெறும் மூலம்

(A) மீன் (B) நிலக்கரி

(C) பெட்ரோல் (D) நீர்.

10. அறிகுறிகள் (index), திறவுச் சொற்கள் (keywords), சுருக்கம் (summary) இவைகளைப் பெற்றுள்ள இந்தியாவின் சுற்றுச்சூழல் சார்ந்த துணுக்குகளின் மாதாந்திரத் தொகுப்பு

(A) ஹார்ன்பில் (B) கிரீன் பார்க்

(C) கிரீன் ஃபைல் (D) இந்தியாவின் காலாண்டுப் பத்திரிக்கை.

## பகுதி – II

கீழ்க்காணும் வினாக்களில் எவையேனும் **ஐந்திற்கு** அரைப் பக்கத்திற்கு மிகாதவாறு சுருக்கமாக விடையளிக்கவும் : ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு மதிப்பெண்கள்.

5 × 2 = 10

11. ஒரு குழந்தையின் மீது வினைபுரியும் சமூக நிலை சார்ந்த சூழ ன் (Sociological environment) முக்கிய அம்சங்கள் யாவை ?
12. ஆரம்பக் கல்வியின் முற்கால நிலையில் 'சுத்தம்' (Hygiene) என்ற தலைப்பின் ஏதேனும் இரண்டு கற்றல் நோக்கங்களைத் தெளிவுபடுத்தவும்.
13. குழந்தைகளினிடையே சூழல்-தோழமை (Environment-friendly) எண்ணத்தை எவ்வாறு வளர்க்கலாம் ?
14. சுற்றுச்சூழ ல் காணப்படும் அழகுணர்வுத் தன்மையின் (Aesthetic ability) அம்சங்களைப் பட்டிய டவும்.
15. 'சுற்றுச்சூழ ன் மீது பொதுச் சந்தையின் (Local fair) ஆற்றல்' இத்தலைப்பை வகுப்பறையில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைப் பற்றி பகுத்தாய்வு செய்யவும்.
16. தொடக்கப்பள்ளி ஆசிரியராக இருந்து, நீங்கள் EVS-ஐ நிர்வகிப்பதற்கு உதவத்தக்க நிபந்தனைகள் யாவை ?
17. தொடக்கப்பள்ளி ஆசிரியராக இருந்து, வெளியே செல்வதற்கு முன் நீங்கள் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை ?
18. குழந்தைகளிடையே சுற்றுச்சூழலைப் பற்றிய விழிப்புணர்வு ஊட்ட, அச்சடித்த பொருட்களின் (Print materials) பங்கினைப் பற்றி கலந்துரையாடுக.

## பகுதி – III

கீழ்க்கண்ட வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு மாற்று வினா கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து ஒரு பக்கத்திற்கு மிகாமல் விடையளிக்கவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் ஐந்து மதிப்பெண்கள் வழங்கப்படும்.

8 × 5 = 40

19. சுற்றுச்சூழ ன் மீது உயிரியல் ரீதியான கூறுகள் (Biological components) மற்றும் உடல் ரீதியான கூறுகள் (Physical components) ஒன்றையொன்று சார்ந்துள்ளது என்பதை ஏற்ற எடுத்துக்காட்டுகளுடன் விளக்கவும்.

*அல்லது*

ஒரு குழந்தையின் முழு வளர்ச்சி நிலையில் சுற்றுச்சூழ ன் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கவும்.

20. தொடக்கப்பள்ளி நிலையில், சுற்றுச்சூழல் கல்வியை அறிமுகப்படுத்துவதற்கான முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கவும்.

*அல்லது*

NCF 2005 இன் அடிப்படையில், NCERT பாடத்திட்டத்தில் EVS இன் நோக்கங்கள் யாவை ?

21. NCF 2005 மற்றும் EVS க்கு இடையிலான ஐந்து வழிகாட்டு நெறிகளைக் குறிப்பிடவும். அதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடவும்.

*அல்லது*

உட்பொருள் ஒழுங்குபடுத்துத ன் (thematic organisation) ஐந்து நிறைகளையும் அதன் முக்கியத்துவத்தைப் பற்றியும் விளக்கவும்.

22. "சுற்றுச்சூழ ருந்து நாம் கற்பதற்கும், கற்பிப்பதற்கும் அதிக வாய்ப்பு உள்ளது" மதிப்பிடவும்.

*அல்லது*

தொடர்ச்சியான மற்றும் தெளிவமைந்த மதிப்பிடுதல் முறையைப் பயன்படுத்துவது, EVS கற்றல் முறையில் நன்மை பயக்கும். சரிபார்க்கவும்.

23. பள்ளி நிலையில் சுற்றுச்சூழலைப் பற்றியும், சுற்றுச்சூழலுக்காகவும் ஏற்பாடு செய்யத்தக்க செயல்பாடுளை எழுதவும்.

*அல்லது*

EVS இல் உங்களுக்குப் பிடித்தமான ஒரு தலைப்பைத் தேர்வு செய்யவும். 5E மாதிரி வழிகாட்டியின் ஒவ்வொரு நிலைக்கும், ஏற்ற செயல்பாடுகளுடன் கூடிய ஒரு பாடத்திட்டத்தைத் தயாரிக்கவும்.

24. "EVS இல் சோதனை நிலைக் கற்றலுக்குப் (Experiential learning) போதுமான வாய்ப்புகள் உள்ளன". விளக்கம் தருக.

*அல்லது*

"குழந்தைகளில், உள்ளார்ந்த மதிப்புகளை உட்புறப்படுத்த (Internalise the values inherent), EVS இன் கற்றல் குறிப்பிடத்தக்கது" - பகுத்தாய்வு செய்யவும்.

25. EVS வகுப்பில், இயற்கையைப் பயன்படுத்துவதன் மூலம், ஐந்து அம்சங்களை வளர்க்கும் முறையைப் பற்றி விளக்குக.

*அல்லது*

EVS வகுப்பில், இயற்கை மூலப்பொருட்களின் பயனை, ஏற்ற எடுத்துக்காட்டுகள் மூலம் கலந்துரையாடவும்.

26. 'தாவரக் கல்வி'க்கு (Plant study) மாணவர்களை அனுப்புவதற்கு முன்பு, அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய வழிகாட்டுதல்களை எழுதவும்.,

*அல்லது*

உங்கள் பள்ளியில், சூழ்நிலை இயல் மூல ஒதுக்கிடத்தை (Environmental Resource corner) எவ்வாறு வடிவமைப்பீர்கள் ?